முதல் ஐந்திசைப்பண்கள்

ப. சுந்தரேசன்

இசைத் தமிழ் வெளியீடு—க.

முதல் ஐந்திசைப் பண்கள்

★

இசைத் தமிழ் ஆராய்ச்சியாளர்
குடந்தை சங்கீத வித்துவான்:
ப. சுந்தரேசன்

★

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு — டிசம்பர், 1956.

ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-2.

முகவுரை

இசைப் பகுதியினை மொழியுடனேயே ஒருங்கு சேர்த்துக் கூறப்படும் பெற்றிமை வாய்ந்த நம் தமிழ் மொழி, இயற்கை முறையில் மூன்று பகுதிகளாக உணரப் பட்டுளது. அவைதாம் இயல், இசை, நாடகம் (ஆடல்) எனப்படும்.

இக்காலம் நம்மிடையே உள்ள பழைய இலக்கண மாகிய தொல்காப்பியம் முதல் இன்றுவரை உள்ள நூல் களும், இனிவரும் புதிய தமிழ் நூல்களும் இயல்வகைக் கருவூலமாகும்.

பழந்தமிழகத்தில் தனித்த இசைவகை நூல்கள் எண்ணிறந்தனவாகக் கிடந்து அவற்றின் அடிப்படை இலக்கணம் பலவும் இயல் நூல்களில் ஆங்காங்கு கூற வேண்டிய இடங்களில் கூறப்பட்டும் உளது.

இசையின் இயலை இயற்றமிழ் நூல்கள் மூலம் நன்கு பாதுகாத்துவரும் பெருமை நமது சங்க நூல்களுக்கே உரியதாகும்.

அத்தகைய சங்க நூல்களின் உரைகண்ட முதுபெரும் புலவர் பலரும், இன்றியமையாத பல இடங்களில் தனித்த இசைத்தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்தே தூய இலக்கண நூற்பாக்களை முழுதும் தந்து நன்கு விளங்க வைத்துள்ளனர்.

காலவகையில் சிறந்த இயற்றமிழறிவுடை மக்களும் இசை பயின்ற மக்களும் தனித்து வாழ்ந்து சில குறை பாடுகளை ஆக்கிக்கொண்டதால் தனித்த இசைத்தமிழ் நூல்கள் யாவுமே நன்கு பாதுகாக்கப்படாது போயின.

நூலளவில் இசைத்தமிழ் பாதுகாவாது கைவிடப்பட்டிருந்தும் வழக்கு முறையில் பழைய தமிழகத்துத் தூய இசை முறையும் பண்பாடும் அழியாது இருக்கத்தான் செய்தது; செய்கின்றது; செய்யும்.

தென்னுடாகிய தமிழகத்தே வாழ்ந்த மக்களே காலப் போக்கில் தங்களால் பயிலப்பட்ட இசைவகை பலவற்றையும் அதன் இலக்கண வகை சிலவற்றையும் வேற்றுமொழியில் எழுதிவைத்து மகிழ்ந்தனர்.

அந்நிலே அவ்வாறிருக்க, இன்றைய தமிழகம் இசைத் துறையில் ஆக்கம் பல புரிய ஆர்வங்கொண்டு தமிழில் பல புதிய பாடல்களே எழுதி வளர்த்துவர முனேகின்றதேயன்றி, பண்டைய இசைத்தமிழ் முறையை நன்கறிந்து அதன் இலக்கண வகையையும் பெயர் அமைப்பு முறைகளேயும் பண் அமைதியினேயும் கண்டு, மீண்டும் அவை தமிழகத்தில் நிலவுமாறு செய்யும் வகையில் முழு முயற்சி உடையதாக இல்லே.

இந்நிலே கண்டும் கவன்ற தமிழ்ப் பெருமகனுராம் அருட்டிரு விபுலாநந்தப் பெருந்தகையார், பண்டைய இசைத்தமிழ் உருவினேக் காணப் பெரிதும் முயன்று தூய தமிழ்வழியே **யாழ்நூல்** ஒன்று எழுதி தமிழ்மக்கள் முந்நிலேயில் வைத்துப் போந்தார்.

அந்நூலில் அப்பெருந்தகையார் இசைத்தமிழின் தூய அடிப்படை உருவினேக் கணிதவாயிலாக நன்கு தெளிவுபடுத்திவிட்டு, சிதைந்து கிடைத்த பெயர் வகைகளேயும் .ஒருவாறு ஒழுங்குபடுத்திவிட்டு, 'இன்ன உரு இன்ன பெயரெய்திற்று என்று துணிந்து கூறவல்ல தனித்த இசைத்தமிழ் நூல் கிடைக்கவில்லேயே' என மனம் நொந்து கூறவேண்டியதாயிற்று.

1947-ம் ஆண்டில், திருக்கொள்ளம்பூதூர் எனும் ஊரில், அடிகளார் தமது யாழ்நூலை அரங்கேற்றிய காலத்து, அடியேனும் சென்று அன்னாரது ஆராய்ச்சிச் சிறப்பைப் பாராட்டிய காலத்து, அப்பெருந்தகையிடம் நெருங்கி இசைத்தமிழின் அடிப்படை நுட்பங்கள் பல வற்றினை நேரே கேட்கும் வாய்ப்பு பெற்றவனானேன்.

அடிகளார் (விபுலாநந்தர்) யாழ்நூலில் தான் செய்த செய்கைகளையும் கூறி இனிச் செய்யவேண்டிய பல கருத்துகளையும் கூறி அவை யாவும் இசையை நன்கு முறை யாகப் பயின்ற தங்கள் போன்றாரே உறுதிசெய்து கொள் ளத்தக்கவை எனவும் கூறினார்கள்.

அடிகளாரின் ஆசியோடு அளிக்கப்பட்ட யாழ்நூலில் ஏதோ அடியேனால் இயன்ற அளவு பயிற்சியும் ஆராய்ச்சி யும் நடைபெற்று வருகின்றது.

அடியேனது ஆராய்ச்சியின் பயனாக இந்த ஐந்திசைப் பண்கள் எனும் நூல், இசைத்தமிழின் தோற்றமான அடிப்படைக் கருத்தினை விளக்குகின்ற முறையில் முதன் முதலாக வெளிவருகின்றது. இதனை மனமுவந்து வெளி யிடும் சென்னை, பாரி நிலையத்தாருக்கும், இசைத்தமிழ்க் கருத்துக்கள் யாவும் நூல்களாக வெளிவருமாறு அடியே னுக்கு ஊக்கம் தந்துகொண்டு இருக்கும் பேராசிரியர் திரு. மு. வரதராசன் அவர்களுக்கும் எனது நன்றி.

சங்கீதம் ப. சுந்தரேசன்.

பாராட்டுரை

கான கலா சேவக இசை மன்னர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்ரமண்யம் அவர்கள்

ஓம்

நமது தாக்ஷிணாத்ய சங்கீதம் மிக்க புராதனமானது. இது எல்லோரும் அறிந்ததே. நமது சங்கீதம் கர்நாடக சங்கீதம் எனப்பட்டு நல்ல அடிப்படையில் பழைய சம்பிர தாயங்களைக் கொண்டு பெரிய வித்துவான்களாலேயே பராமரிக்கப்பட்டு வந்ததாகும்.

சங்கீதத்திற்கு முக்கியம் நாதமே. நாதம் உலகம் தோன்றும்பொழுதே உள்ளது. நாதம் எந்தக் காலத் திலும் பொது. அதை ஒருவகைப்படுத்தி, ஒரு சமூக மாக்கி வகை செய்துகொள்வது மட்டுமே ஒவ்வொரு தேசத்திலும் வேறு வேறு சம்பிரதாயமாக இருக்கலாம்.

நாதக் கூட்டமான ஒரு தொகுதிக்குப் பெயர் வைப்பது என்பது, ஒரே நாட்டில் பல காலங்களில் பல பெயராக மாறிவிடுவதும் காலப் போக்கில் ஏற்படும் இயற்கைதான்.

எந்த இராகங்களும் அந்தந்தக் காலத்தில் ஏற்படும் மகான்களால் உருப்படிகள் செய்து, அதனைத் தெய்வ மயமாக்கி நன்ருகப் பரிமளிக்கச் செய்வதாலேயே உயர்ந்த நிலையில் நிற்கக்கூடும். கர்நாடக சங்கீதத்திற்கு அடிப் படை எத்தனையோ காலங்களுக்கு முந்தியது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது.

நல்ல திட்டமான அஸ்திவாரத்தில் ஏற்பட்டதால் தான் நமது சங்கீதம் எத்தனையோ காலச் சூழ்நிலைகளுக்கு உட்பட்டும் இன்றும் நல்ல நிலையில் இருந்து வருகிறது; நிற்க.

பெரிய ஸ்வரங்களான சமூகத்தையுடைய மோகனம், இருந்து தோன்றும் மத்யமாவதி, இந்தோளம், சுத்த சாவேரி, சுத்ததன்யாசி இந்த ஐந்து ராகங்களும் மிக்கப் பிராசீன ராகங்களே. இதை யாரும் மறுக்கமுடியாது.

இவைகளுக்குப் பெயர் வேண்டுமானால் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொன்ருக இருந்திருக்கக்கூடும்.

பழைய தமிழ் நூல்களில், அதாவது சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசையிலக்கணங்களையும் வைத்து இன்னும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறியதையும் வைத்து, எனது அபிமானத்திற்கு என்றும் யோக்யதையுடைய கும்பகோணம் சங்கீத வித்வான் ப. சுந்தரேசன் அவர்கள் சுருதி முறையோடு ஆராய்ந்த இந்த முதல் ஐந்திசைப் பண்கள் என்னும் நூல், அதற்கேற்ப ஐந்து வரிப்பாடல்களுடன் வெளிவருகிறது. இந்த நூல் மிகவும் பாராட்டிப் போற்றுதற்குரியது.

சங்கீதத்தை நல்ல குருகுலவாசம் செய்து முறைப்படி அப்பியாசம் பண்ணுகின்றவர்களே சங்கீதத்தைப்பற்றி எழுதவோ, சொல்லவோ வேண்டும் என்பதுதான் முறை.

நமது ப. சுந்தரேசன் அவர்கள், சிறந்த சங்கீத சம்பிரதாய வித்வான் வேதாரண்யம் ஸ்ரீ இராமச்சந்திர ஐயர்வாள் அவர்களிடத்தில் குருகுலவாசம் செய்து, சங்கீதத்தை நன்ருகப் பயிற்சி செய்து கச்சேரி செய்து வருபவர். பாஷா ஞானமும் உடையவர்.

இக்கால வித்வான்கள் இசையில் இலக்கண ஞானத்தைப் பெறுவதும் மிக்க அவசியம் ஆனதால், சுந்தரேசன் போன்றவர்கள் சங்கீத சாஸ்திரத்தை ஆராய்ச்சிசெய்து இம்மாதிரி சிறு நூல்கள் வெளியிடச் செய்வது மிகவும் பாராட்டக் கூடியதே.

இந்நூலை நன்கு ஆதாரம் காட்டி எழுதிய சங்கீத வித்வான் ப. சுந்தரேசன் அவர்களுக்கும், வெளியிடும் பாரி நிலையத்தாருக்கும் மனமார்ந்த எனது நன்றியையும் பாராட்டுதலையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,
சித்தூர் சுப்ரமண்யம்.

அணிந்துரை

தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் இசை யிலக்கணம் கற்றுத் தேர்ச்சி பெற முடியாது என்ற தவருன எண்ணம் நாட்டில் எப்படியோ தலைகாட்டியது. என் இளமையில் அந்தப் பேச்சை அடிக்கடி கேட்டிருக்கிறேன். ஆனால் தமிழிலக்கியம் கற்கும் வாய்ப்புப் பெற்ற பிறகு, அந்தப் பேச்சு எவ்வளவு தவறு என்பதை நன்கு உணர்ந்தேன். தமிழ் நாட்டில் பலவகைக் கலைகளும் வளர்ந்து செழித்து வளர்ந்தது போலவே, இசைக்கலையும் செழித்து விளங்கியது; மிகச் சிறப்பாக ஆராய்ந்து போற்றப்பட்டு வந்தது. மற்றக் கலைகளுக்கு உரிய சான்றுகள் பலவும் படிப்படியாக இழக்கப்பட்டுப் போக, இலக்கியக் கலைமட்டும் உருவம் திரியாமல் நிற்கிறது. இசைக் கலையோ வெவ்வேறு பெயரும் வழக்கும் பெற்று மாறி யிருக்கக் காண்கிறோம். அதனால்தான் தமிழ்க்கும் இசைக்கும் உறவு குறைந்தது போல் சிலர் உணர்ந்து, மேற்கூறியவாறு தவருன பேச்சு எழுதற்கு இடந் தந்தனர்.

குழலும் யாழும் அமைத்து இசைச் செல்வத்தைப் போற்றிய தமிழர் மரபைச் சிலப்பதிகாரத்தில் கண்ட தமிழ்ச் சான்றோர் விபுலாநந்த அடிகள் தம் வாழ்நாளில் பல ஆண்டுகள் தொடர்ந்து உழைத்து ‘யாழ் நூல்’ என்னும் பெருநூலை நமக்கு அளித்தருளினர். அடிகளாரின் நல்லாசியை நிரம்பப் பெற்ற இசைக் கலைஞர் திருவாளர் ப. சுந்தரேசன் அவர்கள், கருநாடக சங்கீதத்தை முறையாகப் பயின்ற பயிற்சியைத் துணைக் கொண்டு ஆராய்ச்சிக் கூட்டங்களில் பற்பல விளக்கங்களை அளித்து வருகின்றூர்

அந்த விளக்கங்கள் யாவும் எழுத்து வடிவில் நிலைக்க வேண்டும் என்னும் வேட்கை கொண்டு, அதனை அவரிடம் தெரிவித்து வந்தேன். இத்துறையில் முதல் முயற்சியாக வெளிவரும் இந்த நூலில், காந்தாரம் (மோகனம்) செந்திறம் (மத்யமாவதி,) இந்தளம் (இந் தோளம்,) சாதாளி (சுத்த சாவேரி,) தனுசி (சுத்த தன் யாசி) என்னும் ஐந்து பண்களை (இராகங்களைப்) பற்றித் தமிழ் முறையில் தமிழ்ப் பாடல்களுக்கு அலகிட்டுத் தெளிவாக எழுதியுள்ளார்.

இம் முயற்சி, தமிழர் அனைவரும் பெருமைப் படத் தக்க நன் முயற்சியாகும். இந்நூல், தமிழில்லந்தோறும் விளங்கத்தக்க கலை விளக்காகும். இதன் ஆசிரியர், இத்தகைய கலைச் செல்வம் பல படைத்துத் தமிழ் நாட் டுக்குப் பல்லாண்டுகள் தொண்டாற்றித் தழைப்பாராக.

மு. வரதராசன்

தமிழிசைச் சங்கம் நிறுவித் தமிழகத்திற்கும்
தமிழ்க் கலைக்கும் பெருமையளித்த
செட்டிநாட்டரசர் ராசா சர் அண்ணாமலை
அவர்களின் பெருந்தகைமைக்கு

அன்புரிமை

இசைத்தமிழில் பண்கள் பல

அவற்றுள் நூற்று மூன்று பண்களும் ஒரு பிரிவிற்குள் அடங்கி யிருப்பவையாகும். இவைகளுள் பெயர் முறையில் ஒற்றுமைப் பாடு போன்றிருக்கும் வேறு வேறு பண்கள் நிரம்ப உண்டு. இக் கருத்தினை இன்றியமையாது உணர்ந்து கொள்ள வேண்டி யிருப்பதால் இந் நூலில் வரும் பண்களின் பெயர் வகைகளில் சிலவற்றைக் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

1. காந்தாரம்.........
2. செந்திறம் வேறு. செய்திறம் வேறு.
3. இந்தளம் வேறு. தத்தளம் வேறு.
4. சாதாளி வேறு. சாதாரி வேறு.
5. தனுசி வேறு. தன்யாசி வேறு. (தற்கால இராகம்)

ஐந்து இசைகள்

இயற்றமிழிற்கு எழுத்து, சொல், பொருள் என மூன்று உறுப்பு இருப்பது போன்று இசைத் தமிழிற்கும் இசை, பண், நிறம் என மூன்று உறுப்பு உண்டு.

இசை—எழுத்து போன்றும், பண்—சொல் போன்றும், நிறம்—பொருள் போன்றும் இருந்த நீர்மை பற்றியே இசைத் தமிழ்ப் பகுதியை மொழியுடனேயே சேர்த்து மொழியாகவே கூறுவதற்கு ஏதுவாயிற்று.

இம்மூன்றுறுப்புக்களில் முதலாவது, இசையே ஆதலால் அவ்விசைதான் ஒலியணுத் திரட்சியாகும் என்பர்.

இசை என்பது உயிர்கள் தனது செவியுறுப்பால் மட்டிட்டறிந்து ஓர்ந்து உணரத்தக்க முறையில் எழும் ஒலியணுத்திரட்சி எனப்படும். இவ்வொலியணுத்திரட்சியே தன்னீர்மை மங்காமலும் மிகாமலும் நீண்டு ஒலிக்கப்படுவதால் இசையெனப்படும் எனக் கூறுவதுமுண்டு.

இஃது = இசை யெனப்படுவ தியம்புங் காலை
ஒத்துணர் ஒலியின் நீட்சி யதாகும்

எனக் கூறப்பட்டது.

இயற்கையில் இசை யெனும் ஒலிக்கூட்டம் ஏதே னும் ஒரு கருவியின் வழியே ஒலித்தால் அன்றி, அதன் அமைதியை உயிர்கள் நன்கு உணரக் கூடாத நிலையில் இருக்க நேரிடும்.

கானில் விளைந்த கழைத்துண்டுகளை நறுக்கி எடுத்து, இயல்பாகவே கைவிரல்கள் வைத்து ஊதுமுறையில் துளையிட்டு, ஊதி மகிழ்ந்து இசைத் தமிழிற்கே அடிநிலையான குழற் கருவியை முதன் முதலாகக் கண்ட மக்கள் பழந் தமிழ்நாட்டு முல்லை நில மக்களே என, பத்துப் பாட்டுப் பெரும்பாணாற்றுப் படை கூறும்.

ஆகவே இசைத்தமிழிற்கு அடிப்படையான முதற் கருவி **குழற் கருவியே** என்பதை நன்கு உண ரலாம்.

இக்கருவியில் இசையானது முதன் முதலில் ஒன்றாய், பின்னர் மூன்றாய், பின்னர் ஐந்தாய், பின்னரும் ஏழாய்த் தோன்றி துளை அளபுமுறைக் கேற்ப ஒலித்து ஒத்தமுறையாக இயங்குவ தாயிற்று.

இவ்வாறு இயங்கும் இசைகளின் தொகுதி ஒரு வரன்முறைப்பாட்டுடன் ஒத்து ஒலிக்கப் பெறுங்கால் சொல் போன்று விளங்கி **பண்** எனப் படுவதாயிற்று.

இஃது=**பலவிசை தானே பண்ணுறக் கூடிப்**
பாங்குறக் குயிலப் பண்ணென லாகும்

எனப்பட்டது.

இசையின் ஒலித்தன்மை எவ்வியல்பு பற்றியும் வேறுபடாது நின்று ஒவ்வோர் இசையும் தனித்து இயங்குங்கால் எழுத்து போன்று தனித்தும், கூடி நின்று இயங்குங்கால் (சொல் போன்று) பண் எனப் பெயர் மாறுபடுவ தாயிற்று எனவும் கொள்ளலாம்.

இசைகள் ஒரு தொகுதியாக ஒலிக்குங்கால் அதே இசை மறைந்து பண்ணுகும் பெற்றிமையை ஆளுடை அரசு எனப்படும். திருநாவுக்கரசர் எனும் பெருந்தகையால் **''பாட்டிசையிற் காட்டு கின்ற பண்''** எனவும், ஆளுடைப் பிள்ளை எனப் படும் திருஞான சம்பந்தரால் **''பண்காட்டும் இசை''** எனவும் நன்கு விதந்தோதப் பெற்றது.

கருவியில் ஓர் இசைமட்டும் ஒலித்துக் கொண்டே இருக்குமாயின், அது உயிர்களுக்கு ஒரேவகையான ஒலியுணர்ச்சியை மட்டுமே தந்து நிற்கும். இரண்டு இசைகள் ஒலித்து நின்றாலும், வெறும் ஒலிகளின் உணர்ச்சியே மிகும். மூன்று இசைகள் ஒலிக்குமாயின், ஒலி உணர்ச்சியோடு கூடி ஒருவகை இன்பம் தோன்றக்கூடுமேயன்றி, அது ஒரு பண்ணின் நீர்மையைத் தந்து நிற்காது போய்விடும்.

ஏறத்தாழ நான்கிசை ஒலிப்பும் அவ்வாறே. ஐந்து இசைகளின் ஒலிப்பு முறையே முதன் முதலில் சிறப்புடை உயிர்களாய மக்கட் குழு வினர்க்குப் பண் (இராகம்) உணர்ச்சியை இசை யுணர்ச்சியோடு தந்து நின்று விளங்குவதாயிற்று.

அத்தகைய ஐந்திசைகள் முதன் முதலில் எவ்வாறு தோன்றியது என்பதனையே விபுலாநந்தப் பெருந்தகையார் தமது யாழ்நூலில் நன்கு தெளிவுறக் கூறிப்போந்தார்.

இதனை நாமும் பலவகையில் ஆராய்ந்தறிய முயற்சிப்பது, இக்காலம் பெயரளவில் மட்டும் மாறுபாடு எய்தி தன் தாயகத்திலேயே வழங்கி வரும் நமது பண்டைய இசைத் தமிழன்னைக்கு மீண்டும் ஒரு புதிய ஆக்கந் தந்து நிறுவவே என்பதை நன்கு உணரலாம்.

பழந்தமிழ் நாட்டில் பற்பலவாக இருந்து பின்பு கடைச் சங்க காலத்தில் தமிழகமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர் பெருமக்கள் பலரால் ஆக்கப்பெற்ற ஒருசில பாடல்களாய **பரிபாடல்** எனும் இசைப் பாட்டு, ஒரு தொகுதியாக, அதாவது எட்டுத்தொகையுள் ஐந்தாவதாக **ஓங்கு பரிபாடல்** எனப் போற்றப்பெற்று இன்றும் நமது பழந்தமிழ்க் கருவூலத்தில் உள்ளதை நாம் எல்லோரும் அறிவோம்.

இப்பரிபாடலில் எட்டாம் பாடலை இயற்றிய பெரும் புலவர் ஆசிரியன் நல்லந்துவனார் ஆவர். **பண்ணுப் பாலையாழ்** எனும் பெரும் பண்ணொன்றை இப்பாடலோடு இயைபு படுத்தியமைத்தவர், இசையிலும் மருத்துவத்திலும் வல்ல மருத்துவ நல்லச்சுதனார் எனும் புலவர் ஆவர்.

இப்பரிபாடல் எட்டாம் பாடல் 22-ம் வரியில் ஆசிரியர் "**ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த் தன்ன**" என்று அக்காலத்திய இசைத் தமிழ்க் கருவியாகிய குழலையும், யாழையும் குறித்ததோ டன்றி, சிறப்புடைக் கருவியாய குழல், ஏழு துளை இடப்பட்டும், ஐந்து துளை இடப்பட்டும் இருந்த ஓர் ஒப்பற்ற உண்மை புலப்படுமாறும் கூறிப் போந்தார்.

இப் பகுதிக்கு உரை எழுதிய ஆசிரியரும், "ஏழு துளையான வங்கியத்தும், ஐந்து துளையான வங்கியத்தும், யாழினும் பிறந்த இசைச் சுருதி யொத்து" எனத் தெளிவுபெறக் கூறினர்.

வங்கியம் என்பது குழற் கருவிக்குப் பொதுப் பெயர். இக்கருவியும் என்ன பொருளைக் கொண்டு ஆக்கப்பெற்றதோ அப்பொருளையே முதலாகக் கொண்டு பெயர் முறையில் பல கருவியாயிற்று.

அவை, களைக்குழல், சந்தனக்குழல், கருங் காலிக்குழல், செங்காலிக்குழல், கொன்றைக்குழல், ஆம்பற்குழல், முல்லைக்குழல், வெண்கலக்குழல் எனவும், மேலும் இவை அமைந்துள்ள உரு நீட்சி யாயிருப்பின் **நெடுங்குழல்** எனவும், குறளாயிருப் பின் **குறுங்குழல்** எனவும் பெயர்பெற்றனவாம். இவையிற்றில் சிறப்பானவைகளைச் செய்யு முறை

ஓங்கிய மூங்கில் உயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி—பூங்குழலாய்
கண்ணனுவந்த கழைக் கிவைக ளாமென்ருர்
பண்ணமைந்த நூல்வல் லோர் பார்த்து

எனும் இப்பழம்பாடலாலும் நன்கு உணரலாம்.

எப்பொருளைக்கொண்டு கருவிகள் ஆக்கப்பெற்ருலும் அக்கருவிகளில் துளையிடும் வழக்கு மட்டும் ஒன்று ஐம்புழை, இரண்டாவது ஏழ்புழை என்பதேயாம்.

அடிப்படையில் முதற் கருவியாகிய குழற் கருவி கழைக் குழலேயாகும். அதாவது மூங்கிலால் செய்யப்பெற்ற கருவி யென்பதாம். இக்கருவியிலும் ஐந்து துளையிட்ட கருவியே மிக முதன்மை வாய்ந்ததென அருட்டிரு விபுலாநந்தரும் யாழ் நூலில் நன்கு வலியுறுத்தியுள்ளார். இயற்கை முறையும் அதுவே.

பின்னரே ஏழ்புழைக் கருவிகள் தோன்றலாயின. அஃதும் ஐம்புழைக் கருவியின் ஒலி உணர்விஞல் ஐந்து நரம்புடைய வில்யாழ்க் கருவி ஒன்று தோன்றி அதன் பின்னர் ஒலி நுட்பம் நன்கறியப்பட்டு ஏழு நரம்புடைக் கருவிகளும் ஏழு துளையிடப்பட்ட குழற்கருவிகளும் பல்வேறு வகையில் தோன்ற வாய்ப்புகள் உண்டாகிய காலத்தே என்பதாம்.

குழலொலி முந்தியதாயினும் யாழொலியின் நுட்பம் அறிந்த பின்னரே இயற்கையறிவும் மொழியறிவும் நன்கு கொண்டு இசையொலிகளுக்குப் பெயர்கள் அமைக்கப்பெற்றன என்பதை நன்கு உணரவேண்டும்.

ஐந்து துளையிட்ட முதற் குழற்கருவியின் வழி எழுந்த முதல் ஐந்து ஒலிகளே **ஐந்து இசைகள்** எனப்பட்டது. இவ்வைந்துமே முதன் முதலில் இயற்கை முறையில் தோன்றிய **ஆதி ஐந்திசைகள்** ஆகும்.

இவற்றை ஒவ்வொன்ருகக் கூடியவரை காரணத்துடன் எழுதி அளவு முறைகளையும் உடன் எழுதி விளக்கந் தருவாம்.

முதலிசை

ஐந்திசைகளில் முதல் இசைக்கு, **தாரம்** எனப் பெயர் இடப்பட்டது. தாரம் என்ற சொல்லின் பொருளும் பழங்கால வழக்கில் முதல் என்பதே யாம்.

இச்சொல்லின் பகுதி—தார்; விகுதி—அம். தார் எனும் சொல் முதன்முதலில் வரும் பொருளைக் குறிக்கும் என்பதும் பழந்தமிழ் வழக்கு. அதாவது புறப்பொருள் வெண்பா மாலையுள் ''தமருட் தலையாதல் **தார்** தாங்கி நிற்றல்'' என்ற இடத்தும், குறளில் ''**தார்** தாங்கிச் செல்லும் தானை தலைவந்த போர்தாங்கும் தன்மை யறிந்து'' என்ற இடத்தும், தார் என்பது முதலில் வரும் தூசிப் படையைக் குறிப்பதைக் காணலாம்.

அன்றியும் இசைத்தமிழ்ப் பகுதிக்கு உரை கண்ட உரையாசிரியர்கள், குரல் முதலாகவுள்ள ஏழிசைகளின் கணிதமுறை கூறுமிடத்து, ''இக் குரல் முதலேழினும் முற்றோன்றியது தாரம்'' எனக் கூறுவது கொண்டும் முதல் இசைக்குப் பழந் தமிழ் வழக்கில், முதல் எனும் பொருள்படுமாறு தாரம் எனப் பெயரிடப்பட்டது என நன்கு உணரலாம்.

தாரம் என்ற அந்த முதலிசையோடு முதன் முதலில் ஆடவர்கள், தங்கள் குரலையும் எழுப்பிப் பயின்றதால் தாரமாகிய முதலொலி ஆடவர் குரலினை ஒத்தது எனக் கூறப்பட்டது.

இத்தகைய தாரம் மெலிவு நிலையிலேயே முதன் முதல் அறிந்துணரப்பட்டது என்பதை நன்கு உளத்திற் கொள்ள வேண்டும்.

———

இரண்டாமிசை

முதலிசையாகிய தாரத்தினை வைத்து நோக்க ஒலிமுறையில் இரண்டாமிசைக்குக் குரல் எனப் பெயரிடப்பட்டது. முதலிசையைக் குறியீட்டு முறையில் ஓர்ந்துணர்ந்து (குரல்) இரண்டாமிசையின் ஒலியையும் உணர்ந்து அது மகளிர் குரலை ஒத்து விளங்கிய தன்மையால், குரல் எனவே கூற வேண்டியதாயிற்று.

ஆடவர் குரலைவிட மகளிர் குரல் இனிமை தருவதால் குரல் எனும் சொல் மகளிர் குரலுக்கே உரியதாயிற்று.

தாரத்தின் ஒலியிருந்து குரலின் ஒலி, அளவு முறையில் நான்காம் அலகில் நிற்பதை நன்கு உணரப்பட்டது. அதாவது ஒன்றுக்கொன்று இடையே மூன்றலகு இடந்தந்து நின்றது. ஆதலால் இதனை இவ்வாறு குறிக்கவேண்டும்.

தாரம்					குரல்
O	க.	உ.	ங.		ச

மூன்ருமிசை

இந்த மூன்ருமிசைக்குத் **துத்தம்** எனப்பெயர் இடப்பட்டது.

இவ்விசை குழலில் நின்ற ஐந்து துளைகளில் நடுநின்ற துளைவழி எழுவதால், முன் இரண்டு துளையும் பின் இரண்டு துளையும் இருக்க, நடு நின்ற இத்துளை ஆற்றிடைக் குறைபோன்று அமையப்பெற்றதால், இதற்குத் துத்தம் எனவே பெயரமைக்கப்பெற்றது.

துத்தம், துந்தம், துருத்தி என்பன ஒரு பொருட்கிளவி எனப்படும்.

இந்த இசை முதலிசையாகிய தாரத்திற்கு மூன்ருவதாகவும், இரண்டாமிசையாகிய குர லுக்கு இரண்டாவதாகவும் நின்றது. தாரத்திற் கும் குரலுக்கும் இடையில் அளபு முறை எத் துணை நின்றதோ, அதுவே குரலுக்கும் துத்தத்திற் கும் நின்றது. இவ்வமைப்பினுல் தார ஒலியோடு குரலொலியையும் மூன்ருவதாகிய துத்த ஒலியை யும் மாறுமாறுற்று ஒலிக்கச்செய்து கேட்கப்படும் பொழுது உண்டாகும் ஒரு தனித்த இனிமை யுணர்ச்சியையும் உணரப்பட்டது.

ஆகவே இம்மூன்று இசைகளின் குறியீடு யாவையும் அலகு நிலையோடு குறிக்க=

தாரம்		குரல்		துத்தம்
O	க.உ.ங	ச	க.உ.ங	ச

—என நிற்கும் என்பதை நன்கு உணரலாம்.

நான்காமிசை

இவ்விசைக்குப் பெயர் உழை எனப்பட்டது. முந்திய மூன்று இசைகளையும் வலக்கை விரல் களை வைத்து ஊதிவந்து, முதன்முதலில் இடக் கை விரல் வைத்து ஊதும் துளையின் வழி யெழுந்த இந்த இசையை இடத்தது எனும் பொருள்பட உழை எனப்பட்டது.

உழை எனும்சொல் பழந்தமிழில் இடத்தது எனும் பொருள் தருவதையும் காணலாம்.

ஐம்புழைக்குழற் கருவியில் ஐந்திசை முறை யில் மூன்று இசைவரை வலக்கை விரல்கள் வைத்தும் பின்னர் நான்காம் இசை இருந்து இடக்கை விரல்கள் வைத்தும் ஊதப்பெறும்.

இதுவே ஏழிசை முறையில் அதாவது நான் காம் இசை என்பது ஐந்தாம் இசையாகும். அப் பொழுது ஐந்தாமிசை இருந்து இடக்கை விரல் கள் வைத்து ஊதப்பெறும் என அறியவேண்டும்.

இக்கருவியில் ஒரு கைவிரல் முடிந்து மற் றொரு கைவிரல்கள் வைத்து ஊதும் அளவில் துளையிடப்பட்டதால் ஏனைய இசைகளின் இடை யீட்டு அளவு முறையைவிட ஓரலகு இந்நான்காம் இசைக்குரிய துளை தள்ளி நின்றுவிட்டது.

ஆதலால் துத்தத்திற்கும் உழைக்கும் இடையே நான்கு அலகு நின்று ஐந்தாம் அலகில் உழை நிற்க வேண்டியதாயிற்று.

இசைத்தமிழின் நுண்ணிய நுட்பங்கள் பலவற்றுள் இதுவே முதல் நுட்பமாகும்.

இதன் குறியீடும் அலகு நிலையும்

தாரம்	குரல்	துத்தம்	உழை
0. க.உ.ந. ச.	க.உ.ந. ச.	க.உ.ந.ச, ரு	

என இவ்வாறு அமையும்

———

ஐந்தாமிசை

இந்த இசைக்கு **இளி** எனப் பெயரிடப் பட்டது. குழலில் உள்ள ஐந்தாம் துளையில் இசை எழுப்பப்படும்பொழுது அந்த இசையிருந்து அழுத்தமாக ஊதப்பெற்றால் மேல் நிலை இசைகள் தோன்றும் உண்மையை அறிந்தே இவ்விசைக்கு இளி எனப் பெயரிடப்பட்டது.

இளி இசையானது ஏனைய இசைகள் தோன்று வதற்கான தனித்த நீர்மையோடு கூடி, தான் ஒரு அடிமணைபோன்று விளங்குவதால் அதனை, **பட்டடை** எனப் பொதுமுறையிலும் கூறப்பட்டது.

தாரம், குரல், துத்தம், உழை எனும் நான் கினையும் இயல்பான மெலிவு நிலையில் கண்டு உணரப்பட்டதால் இந்த இளி இசை இறுதியாக நின்று ஒரு நிரல் முடிவதாயிற்று.

நான்காம் இசையாகிய உழைக்கும் இவ்விளி யிசைக்கும் இடையீடு இயல்பான மற்றைய இசை களுக்கு அமைந்தது போன்றே அமைவதாயிற்று. அதாவது உழையிருந்து இடையில் மூன்றலகு நிற்க நான்காம் அலகில் இளி நின்றது.

இவ்வலகுக் குறியீட்டு முறையினை எல்லா மாகச் சேர்த்து,

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
O. க.உ.ங.	ச. க.உ.ங.	ச. க.உ.ங.ச.	ரு.க.உ.ங.ச.	

என இவ்வாறு எழுதி அறியலாம்.

இதுவரை ஐம்புழைக் குழற்கருவியில் இயல்பாக அமைந்த ஐந்திசைகளைத் தனித்தனியே எழுதி, பெயர் முறையையும் அளபு முறையையும் உடனுக்குடன் எழுதப்பெற்றது.

இசைத்தமிழில் குழற்கருவிக்கடுத்த இசைக் கருவி யாழ்க்கருவியேயாகும். இதே ஐந்திசை நிலைகளை யாழ்க்கருவிகளில் எவ்வாறு அமைக்கப் பெற்றதென்பதை நன்கு அறிதல்வேண்டும்.

யாழ்க் கருவிகளில் மிகப் பழைமையான கருவியும் முதன்மையானதுமான கருவி, **வில்யாழ்** எனப்படும். இக்கருவியிலும் முதன்முதலில் ஆக்கப்பெற்ற கருவி, ஐந்து நரம்புடைய வில் யாழ்க்கருவியே ஆகும்.

இக்கருவி **''குமிழின் புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின் வில்யாழ்''** எனக் கூறப்படுவதால் புறத்தே வயிரமுடைத்தாய் உள்ளே துளையுடைய குமிழங்கொம்புகளை வில்போன்று வளைத்து மரல் எனும் செடியை உலரவைத்து நசுக்கி நாரெடுத்து கயிறுகத் திரித்து (வில்போன்று) கட்டப் பெற்ற தென நன்கு ஆராய்ந்த விபுலாநந்த அடிகளார் கூறுவர்.

குமிழ் எனும் மரம் பெருங்குமிழமரம் எனவும் யாழ்நூலில் குறிக்கப் பெறுகிறது.

மேற்கூறிய குழற்கருவியையும் வில்யாழ் எனுங் கருவியையும் மிகப் பழங்காலத்தில் முல்லை நிலத்தில் வாழ்ந்த "ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன் கன்றமர் நிரையொடு கானத்தல்கி"ச் செய்தான் எனச் சங்க நூல் கூறுகிறது.

ஐந்து நரம்புடைய வில்யாழாகிய இக்கருவியில் கட்டப்பெற்ற நரம்புகளுக்கு முறையே முதல் நரம்பிற்குத் தாரநரம்பெனவும், இரண்டாம் நரம்பிற்குக் குரல் நரம்பெனவும், மூன்றும் நரம்பிற்குத் துத்த நரம்பெனவும், நான்காம் நரம்பிற்கு உழை நரம்பெனவும், ஐந்தாம் நரம்பிற்கு இளி நரம்பெனவும் பெயரிடப்பட்டது.

இந்நரம்புகளின் ஒலிமுறையை குழல் ஒலியைக்கொண்டே ஓர்ந்துணர்ந்து நிறுவப்பட்டது.

இம்முறையில் கருவிகள் தோன்றின மரபும் ஒலிமுறை உணர்ந்தறிந்த மரபும் முறைவழுவாது இருந்தமையால் பாலைக்கலியினுள் "நரம்பின் தீங்குரல் நிறுக்குங் குழல்போல்" எனக் கூறப்பட்டது.

இயற்கை முறையில் குழற்கருவியில் இல்லாத வாய்ப்பு யாழ்க்கருவியில் ஏற்பட்டது. அதாவது வில்யாழில் குழல் ஒலிக்கேற்ப ஐந்து நரம்புகளை முறையே கட்டிய பிறகும், அக்கருவியின் அடியில் வளைவான பகுதியில் மிகுதியான இடம் இருந்து ஆங்கும் நரம்புகள் கட்ட வாய்ப்பு இருந்ததேயாம்.

அவ்விடத்தும் நரம்புகளைக் கட்டக்கருதிய பழந்தமிழர், முன்னைய ஐந்து நரம்புகளின் பாதி அளவு முறையை மீண்டும் ஐந்து சிறு நரம்பாக முந்திய நரம்புகளின் தொடர்பாகவே கட்டி நன்கு அமைத்துவிட்டனர். ஆகவே யாழ்க்கருவியில் ஐந்து துளைக் குழற்கருவிகளின் வழி எழுந்த இசை ஐந்தும், பத்து நரம்புகளின் வழி இருவகை நிலை யில் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

இசைத்தமிழின் நுண்ணிய நுட்பங்கள் பலவற்றுள் இது இரண்டாவதாகும்.

குழற்கருவியைவிட யாழ்க்கருவியின் மூலமே இசைத்தமிழ் நன்கு வளர்ச்சியுற்றது.

இவ்வாறு நரம்புகள் கட்டப்பெற்ற சீரிய பெற்றிமையினுலே அந்நரம்புகளை, தாரம் முதல் (செம்பால்=பாதி) தாரம் ஈருகவும், குரல் முதல் குரல் ஈருகவும், துத்தம் முதல் துத்தமீருகவும், உழை முதல் உழை ஈருகவும், இளி முதல் இளி ஈருகவும் (நரம்புகளைத்) தெறித்து ஒலியை உணர நன்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வாறு இயற்கை முறையானமைந்த ஐந்து இசைகள் யாழ்க்கருவியில் ஒலிநுட்ப வகையில் இரு நிலைகளாகக் கூடி நின்றதால், இவ்விரு நிலை அமைப்பைக் கொண்டு, ஒவ்வோர் இசையையும் முதலாகக் கொண்டு கணித்தறிய, ஐந்து நிலைகள் தோன்றி, ஒவ்வொரு நிலையும் ஒரு பண்ணுக, ஆக ஐந்து பண்கள் உண்டாகும் என்பதை அறியலாம்.

இங்கே முதன் முதலில் அமைப்பு முறை என்னவென்பதை ஒருங்கே அறிய எல்லாவற்றை யும் அடைப்பினுள் எழுதி அறியவேண்டும்.

ஐந்திசை நிலைகள்

க	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
உ	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
ங	துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்
ச	உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்
ரு	இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை

இதனுல் இசையமைதியை ஒருவாறே உணரக் கூடும். இவ்வாறு அடைப்பினுள் நிரலாக இசை களை எழுதி அறிவதால் இசைநிரல் நுட்பம் பல வாக அறியலாம்.

இனி ஐந்திசை நிலைகளை அதனதன் அலகு முறையில் அட்டவணைப் படுத்தி அறியவேண்டுவ தால், அவ்வாறு எழுதுமுன் முன்னர் தனித்து எழுதிய இடையீட்டின் அலகுத் தொகையினை கூட்டுமுறையில் எழுதிக்கொள்ள வேண்டும். அதாவது தொடர்ந்த எண் வரிசையில் எழுத வேண்டும்.

தாரம் . . . . குரல்

O. க. உ. ௩. ௪.

துத்தம்

௫. ௬. ௭. ௮.

உழை

௯. ௰. ௰க. ௰உ. ௰௩.

இளி

௰௪. ௰௫. ௰௬. ௰௭.

என்று எழுதி அறிந்துகொள்ளவேண்டும்.

இதனை ஒவ்வொரு இசை முதலாக எழுதி ஒவ்வொன்றிற்கும் முதலில் வட்டக் கோடிட்டு அதனதன் அலகுத் தொகையை கழித்துக் கணித்து, மீண்டும் அட்டவணைப்படுத்த ஒவ்வொரு பண்ணுக்கும் உரிய இசை நிலையும், அலகு முறையும் தெளிவுபெறத் தோன்றும். இசையின் கீழே இருக்கும் எண் அலகு நிலையாகும்.

அலகு நிலைகளுடன் ஐந்திசை நிலைகள்

க	தாரம் O	குரல் ச	துத்தம் அ	உழை ௰௩	இளி ௰எ
உ	குரல் O	துத்தம் ச	உழை கூ	இளி ௰௩	தாரம் ௰அ
௩	துத்தம் O	உழை ௫	இளி கூ	தாரம் ௰ச	குரல் ௰அ
ச	உழை O	இளி ச	தாரம் கூ	குரல் ௰௩	துத்தம் ௰எ
௫	இளி O	தாரம் ௫	குரல் கூ	துத்தம் ௰௩	உழை ௰அ

அலகு, மாத்திரை, சுருதி என்பன ஒரு பொருட் சொற்களாகும். இசையொலி நுட்பத்தினை அளந்துகூறப்படும் இவ்வலகினை, "**அளவிடுங் கருவி அலகதுவாகும்**" எனக் கூறப்படும்.

இவ்வலகுக் கணித முறை மிக நுண்ணிய பகுதிகளில் மாறுபாடு அடையுமேயன்றி இயல்பான பருமட்ட முடிவில் மாறுபாடு அடையாது. இக் கணித முறை ஒன்றினாலேயே இசைத் தமிழின் பண்டைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒருங்கு அறிந்துணரக்கூடும். இதனை நன்கறிந்து விளக்கிய பேரறிஞர், விபுலாநந்தப் பெருந்தகையார் ஒருவரே.

பழைய அலகுநிலைகள் இக்கால இசைமுறையில் என்ன பெயர் பெற்றுளது என்பதை அட்டவணைப் படுத்துவாம்.

அலகுகள் (இசையில்) இருபத்தி யிரண்டு எனப்படும். வட்டக்கோடும், இருபத்தி யிரண்டாம் அலகு நிலையும் (0-௨௰௨) ஒரே நீர்மைய. 0 வட்டம் சமநிலையில் முதலாகும். இதுபோன்று ௨௰௨-ம் அலகின் இடம், வலிவு நிலையில் முதலாகும்.

ஐந்திசைப் பண்களில் வரும் அலகுநிலைகளுக்கு மட்டுமே இவ்வட்டவணை

அலகு	௯=சுத்த மத்யமம்
0=ஷட்ஜம்	௰௩=பஞ்சமம்
௪=சதுச்ருதிருஷபம்	௰௪=சுத்த தைவதம்
௫=சாதாரணகாந்தாரம்	௰௭=சதுச்ருதி தைவதம்
௮=அந்தர காந்தாரம்	௰௮=கைசிகி நிஷாதம்

இனி, பண் அமைதியினை ஒவ்வொன்றாக எழுதியறியலாம்.

முதலாவது தாரப்பண்

தாரம் முதல் தாரம் ஈறாக

இசை	தாரம்	-	குரல்	-	துத்தம்	-	உழை	-	இளி	
அலகு	O	-	௪	-	௮	-	௰௩	-	௰௭	-

சமநிலைத்தாரம்	வலிவுநிலைத்தாரம்
O	௨௰௨

துத்தத்திற்கும் உழைக்கும் இடைநின்ற அளபு போன்றே இளிக்கும் மேல்நிலைத் தாரத்திற்கும் நிற்கும். அதாவது இடையில் நான்கு அலகுகள் நிற்கும்.

இப் பண் மிகமிகப் பழங்காலத்தில் இதன் முதலிசையின் பெயரைக் கொண்டே **தாரப்பண்** என இயற்கை முறையில் கூறப்படுவதாயிற்று.

பின்னர் காலவகையில், இசைத் தமிழிற்கே அடிமணியான முதற்பண்ணாகிய இதன் தன்மை குறித்தும் ஏனைய பண்கள்யாவுமே இதனடியாகத் தோன்றிய நிலையறிந்தும் இதனை **ஆசான்** எனப் பெயரிட்டுக் குறிக்கப்படுவதாயிற்று.

பின்னரும் காலவகையில் ஏழிசை யமைப்பு தோன்றிய பின்னர், அவற்றுள் முதலாய ஒன்றினையும் ஆசான் எனக் கூற நேரிட்டதால், ஏழிசை யமைப்பினைப் **பண்** எனவும், ஆறிசைத் தொகுதிகளைப் **பண்ணியற்றிறம்** எனவும், ஐந்திசை அமைப்பினைத் **திறம்** எனவும், நான்கு இசைத் தொகுதிகளை **திறத்திறம்** எனவும் கூறுபாடு செய்தமைத்த காலத்து, இத்தாரப் பண்ணினை பழைய ஆசான் எனும் பெயரோடு (இது ஐந்திசைப் பண் ஆதலால்), திறம் எனும் சொல்லைச் சேர்த்து **ஆசான்திறம்** எனப்பட்டது.

சிலப்பதிகாரம் புறஞ்சேரியிறுத்த காதையில் (110-ம் வரிமுதல்) இளங்கோவடிகள் கூறியுள்ள—

> ''வரன் முறை வந்த மூவகைத் தானத்துப்
> பாய்கலைப் பாவை பாடற் பாணி
> ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டு''

எனும் இப்பகுதிக்கு உரை கண்ட, அரும்பதவுரைகாரர் ''ஆசான்திறம் - காந்தாரம்'' எனவும் ''ஆசானென்று ஒரு பண்ணிற்குப் பெயராகவும் இசைத் தமிழிற் கூறுப'' எனக் கூறினர்.

விரிவுரை கண்ட அடியார்க்கு நல்லார் என்பார், ''ஆசான்றிறம் - காந்தாரம்; ஆசான்சாதி நால்வகையாவன; ஆசானுக்கு அகச்சாதி – காந்தாரம், புறச்சாதி - சிகண்டி, அருகுசாதி - தசாக்கிரி, பெருகுசாதி - சுத்த (சுருதி) காந்தாரமெனக் கொள்க'' எனக் கூறி ''பண் நூற்றுமூன்று; அவை

நால்வகைப்படும்; பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என. அவற்றுள் இது திறங் கூறிற்று'' எனவும் கூறினர்.

மேலும் அவ்வடியார்க்கு நல்லார், அதே காதையில் ''செந்திறம் புரிந்த'' எனுமிடத்து தன் பண்ணியம் அத்திறமாய்த் தனக்கினமான செந்திறத்தோடு புரிந்தவென்க.

என்றது ''பண், பண்ணியல், திறம், திறத் திற மென்னுமிவை, சம்பூரணம், சாடவம், ஔடவம் சதுர்த்தமென வட மொழிப் பெயரானும் வழங்கும்'' எனத் தெளிவு பிறக்குமாறு கூறிப் போந்தார். இதனுல், இளங்கோவடிகள் காலத்து வழங்கிய ஆசான்திறம் என்னும் பண், உரையாசிரியர்கள் காலத்தில், காந்தாரம் என வழங்கியதை அறியலாம். அன்றியும், ஐந்திசைகளைக் கொண்ட திறம் என்றும் அறியலாம்.

இனி, காந்தாரம் எனும் சொல் பற்றியும் சிறிது ஆராயலாம்.

இசைநூல் வரன் முறையில் (ஒரு) இசைத் தொகுதிக்கு பெயரிடப்படும்பொழுது அந்தத் தொகுதியின் முதலிசையின் பெயரையே பண் பெயராக அமைப்பதும் பழைய வழக்கு.

இது பற்றியே தாரம் முதலாகவுள்ள இந்த ஐந்திசைப் பண், தாரப்பண் எனக் குறிக்கப் பட்டது.

இசைத் தமிழின் வளர்ச்சி முறையில் ஒவ்வொரு இசைக்கும் (இசை யொலிக்கும்) இயற்றமிழின் எழுத்துகளாய உயிரெழுத்தாலும், மெய்யெழுத்தாலும் குறியீடு செய்யப்பெற்ற காலத்தில் இம் முதல் இசைக்கு முதல் எழுத்து கொண்டே குறியீடு செய்யப்பெற்றது. அதாவது, இந்த தாரத்திற்கு, உயிரெழுத்தின் குறியீடு 'அ' எனவும், மெய்யெழுத்தின் குறியீடு 'க' எனவும் குறிக்கப்பெற்றது.

இயற்றமிழினை விட இசைத் தமிழ் வகையில் இயல் எழுத்துகளுக்கு அளபெடை நீண்டு ஒலிக்கும் தன்மையில் அ எனும் எழுத்து ஆ எனவும் க எனும் எழுத்து கா எனவும் குறிக்கப்பெற்று, கா+தாரம்=காத்தாரம் எனக் கொண்டு மெலிந்து காந்தாரம் எனத் திரிந்தது. அதனை கா+தாரம், காவாகிய தாரம், காவாம்தாரம், காவாந்தாரம், காந்தாரம் எனக் கொள்ளலாம். இப்பண்ணில் பழைய காலத்தில் வரிப் பாட்டும் பரி பாடல்களும் நிரம்ப இருந்திருக்க வேண்டும். இக்காலம் நம்மிடையே இருந்து வரும் சிறந்த ஒங்கு பரிபாடல்களிலும் நான்கு பாடல்கள் காந்தாரப் பண்ணில் அமைக்கப் பெற்றுளது.

பரி பாடல் தொகுத்த காலமிருந்து எத்துணையோ நூற்றாண்டுகள் வரை, பிற்காலச் சோழமன்னர்கள் காலத்தில் வாழ்ந்த கருவூர்த் தேவர் எனும் ஒரு பெரிய சித்தர் காலம் வரை

இப்பண்ணிற்குப் பெயர் காந்தாரம் என்றே கூறப்படும் வழக்கு இருந்து வந்துளது.

முதன் முதலாக எழுந்த ஐந்திசைப் பண்ணு கிய தாரப் பண்ணின் பெயரே, காந்தாரம் என் பதனை நாம் இதுகாறும் கூறியவற்ருல் நன்கறிந்து உணரலாம்.

மேலும் காந்தாரத்தைப் பற்றி சிறிது ஆராய்வாம். பழந்தமிழ் நாட்டில் இசைத் தமிழ் வளர்த்தவர்கள் பாணர்களாவார். இவர்கள், யாழ்க்கருவியில் கட்டப்பெறும் முதல் நரம்பினைத் தாரம் என்ற சொல்லால் குறித்துத்தார நரப்பு என்றனர்.

இவ்வுண்மையைத் திருஞானசம்பந்தர்; திருவாலவாய் (மதுரை)த் திருப்பதியத்தில் **"தாரம் உய்த்தது பாணர்க் கருளோடே"** எனக் கூறி, இசைத் தமிழின் அடிப்படையான முதலிசையை எத்துணை உறுதிப் பாட்டுடன் விளக்கி, நம்ம ஞேரை உய்த்துணர வைக்கின்ருர் என்பதனையும் நாம் அறியலாம்.

மேலும், முதல் இசையாகிய தாரம்-காந் தாரம் ஆனது பற்றியும் குறித்தோமல்லவா? தார இசைவேறு. தார இசையை முதலாகக் கொண்டு நின்ற ஐந்திசைத் தொகுதியாய தாரப் பண்வேறு. இந்த உண்மையை உள்ளத்தில் உறுதியாகக் கொள்ளவேண்டும்.

அதாவது, தாரப்பண்ணிற்கு முதலிசை தாரம் என்ற இசை தான். ஆயினும் தாரவிசை எனக் கூறும் பொழுதும், தாரப்பண் எனக் கூறும் பொழுதும் உள்ள நுண்ணிய கருத்து சிலவுண்டு. அவை, தாரம், தார விசை, தாரப்பண், என்ற மூன்று சொற்களாகும். இத்தகைய சொற்களின் நுண்மையான கருத்துக்களை உள்ளத்தில் மிகத் தெளிவு பெற, பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

தாரம் என்ற சொல், முதல், முதல் இசை, முதல் துளை, முதல் நரம்பு, முதல் கிரமம், எனும் பொருள்களைத் தாங்கி நிற்கும். இது தூய பழந் தமிழ் வழக்காகும். இச் சொல், இக்கால வழக்கில் ஒரு நிலையைக் குறிக்கும். இது, தாரஸ்தாயி எனப்படும்.

தார விசை எனும் சொல், முதல் இசையை மட்டும் குறிக்கும். தாரப்பண் எனும் சொல், முதற்பண், எனப் பொதுவாக நின்று சிறப்பாகக் காந்தாரப்பண் என்ற பொருளைத் தாங்கி நிற்கும். ஆகவே தார விசை என்பது முதலிசை என உணர வேண்டும்.

இதுவே, (தாரம் என்ற இசை.) காந்தாரமாகி காந்தாரம் எனும் இசையாகுமல்லவா? இது போன்றே தார்ப்பண், காந்தாரப்பண்—ஆகின்றது. இவ்விரண்டினுள்ளும் முதலாவது தாரம் என்னும் இசையான காந்தார இசையே என்பதாம்.

இவ்விசையையே, முதலிசையாகவும் அதாவது தொடக்க இசையாக, இன்னும் விளங்கக் கூற வேண்டுமாயின் ஆதார சுருதியாக, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவையாற்றில் வாழ்ந்த பண் பாடும் காரிகை யார், (காந்தார இசையை) முதலாக வைத்துப் பண் பாடினுர்களாம்.

இவ்வுண்மையையும் திருஞான சம்பந்தரே **"காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண் பாட கவினுர் வீதித் தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும் திருவையாறே"** எனக் கூறி நம்மனோர் யாவரையும் பண்டைய இசைத் தமிழின் அடிப் படையை உணருமாறு செய்கின்ருர் எனக் கூற வேண்டியதும், மிக்க இன்றியமையாததாக வுள்ளது.

இக்கருத்துகள் யாவும் எதனைக் காட்டுகின் றன? பண்டைய இசைத் தமிழின் அடிப்படை யான தோற்ற முறையை யன்ருே காட்டுகின்றன! இனி கி. பி. ஏழாம் நூற்ருண்டின் அளவில் இருந்து இதன் இலக்கியமான பாடல்கள் பற்றி யும் சிறிது காணலாம்.

இக்காந்தாரப் பண்ணில் திருஞான சம்பந்தர் பாடிய உ௰௧ பதியங்களும், திருநாவுக்கரசர் பாடிய ௧ பதியங்களும், சுந்தரர் பாடிய ௫ பதியங் களும், திருவிசைப்பாவில் உ பதியங்களும், திருவாய் மொழியில் சில பதியங்களும் இன்றள வும் நம் நாட்டில் அவ்வந்நூல்களில் உள்ளன.

ஆகவே மிகப் பழங்காலத்தே இருந்த தாரப் பண் காலவகையில் ஆசான் எனவும், ஆசான் திறம் எனவும், காந்தாரம் எனவும் பெயர் மாறு பட்டு வந்துள்ளது என நன்கு அறிந்துணரக் கூடும். அதற்கிலக்கியமான பல்வேறு பாடல் களும் இருந்தன என்றும் உணரக் கூடும்.

செவிப் புலனுல் மட்டும் ஓர்ந்துணரத்தக்க ஒலித் தொகுதியைப் பெயரிட்டுக் கூறும் முறை யில் காலவகையில் மாறுபாடு அடைவது இயற்கையே யாகும். நம் தமிழ் நாட்டிலேயே, இசைத் தமிழிற்கே அடிப்படையான முதன்முத லான தாரப் பண்ணுகிய ஆசான்திறமெனும் காந் தாரம் இக்காலம் எவ்வாறு வழங்கி வருகின்றது என்பதனை அதன் இசைநிலைகளுக்குரிய அலகு நிலைகளைக் கொண்டே அறிய முடிகின்றதே தவிர வேறு பெயர் வகையால் தொடர்ந்த முறையில் அறியக்கூடாததாக இருக்கின்றது.

ஆயினும் அவ்வலகுநிலைகள் இக்கால இசை யில் என்னென்ன பெயர்களோடு வழங்கி வரு கின்றதெனக் கண்டால் அதே பண்ணிற்கு இக் கால இராகப் பெயரை நன்கு கூறிவிடலாம். ஆதலால், அதனையும் எழுதியறியலாம்.

தாரப்பண்

பழைய பெயர்கள்		அலகு நிலை	தற்காலப் பெயர்கள்
க	தாரம்	0	ஷட்ஜம்
உ	குரல்	ச	சதுச்ருதி ருஷபம்
ங	துத்தம்	அ	அந்தர காந்தாரம்
ச	உழை	யங	பஞ்சமம்
ரு	இளி	யஎ	சதுச்ருதி தைவதம்

ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தர காந்தாரம், பஞ்சமம், சதுச்ருதி தைவதம் எனும் ஐந்திசைகள் உள்ள தற்கால இராகம் **மோகனம்** எனப்படும். பெயர் வகையில் மட்டுமே மாறுபாடெய்திய பண்டைய **தாரப்பண்** இக்காலம் **மோகனம்** எனும் பெயரால் உலவி வருவதை நன்கு அறியலாம்.

இங்கே, இத்தாரப் பண்ணின் இசைகளின் பிறப்பு முறை பற்றியும் அறியவேண்டும். தாரம் இருந்து ஏனைய இசைகள் கிளைமுறையில் தோன்றின. யாழ் நூலில் அருட்டிரு விபுலாநந்த அடிகளார், இசைத்தமிழின் முதற்கிரமமாம் தாரக்

கிரமத்தின் பிறப்பு முறையைக் கணித வாயிலாகக் காட்டுமிடத்து; கீழ்க்கண்டவாறு காட்டியுள்ளார்.

''தொடங்குமிடமாகிய 0 ல் தாரம் நிற்றலின் அதன்கிளையாகிய உழை 13ல் நின்றது. உழையின் கிளையாகிய குரல் 13+13=26ல் நின்றது. இது மேற்றானத்து நிலை. 26ல் 22ஐக் கழித்துப் பெறுகின்ற 4 முதற்றானத்தில் குரல் நின்றவிடமாகும். குரலின் உள்ளே தோன்றும் இளி 4+13=17ல் நின்றது. இளியினுள்ளே தோன்றும் துத்தம் 17+13=30ல் நின்றது. அங்ஙனமாதலின் முதற்றானத்திலே 30—22=8ல் நின்றது'' என்பதாம்,

இதனை நிரல் செய்யுமிடத்து,

தாரம் - 0. குரல் - 4. துத்தம் - 8. உழை - 13 இளி - 17. என்று வரும். இக்கணித முறை கூறியதேதான் தாரப் பண்ணின் இலக்கணமாகும். மேலும் இக்கணிதமுறை, அதாவது 13ம் அலகு 13 ம் அலகாகக் கணிக்கப்பெறும் பழைய வழக்கு, பிற்காலத்தில் ஷட்ஜ பஞ்சம சம்வாதித்துவம் எனப்பட்டது. இதனை, சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூற வேண்டுமானால். சா - பா. முறை எனக் கூற வேண்டும்.

இம்முறையை இசைகண்ட நாடுகள் எல்லாமே முற்காலத்திலேயே நன்கு உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறுணர்ந்திருப்பதனாலேயே

எல்லா நாடுகளிலுமே இப்பண், இராக அடிப் படையில் முதல் இராகமாக இருந்து வழக்கிலும் இருந்து வந்திருக்கின்றது.

இசையை மொழிவழி கண்டு மொழியாக்கிய தமிழ் மகன் அறிவிலும் இவ்வொப்புமை மிகப் பழங்காலத்தில் குழல் வழியாகவும் யாழ் வழியாகவும் தோன்றியது எனப் பழந்தமிழ் நூல்கள் கூறுவதில் வியப்பொன்று மில்லையன்றோ!

மிகப் பழைய இசைத் தமிழிற்கு இலக்கிய மான பாடல்கள், பரி பாடல்கள், வரிப் பாடல்கள் குரவைப் பாடல்கள் போன்றவையே. பிறவும் உண்டு.

முதன் முதலாகப் பண்ணுக உருப்பெற்ற இந்தத் தாரப் பண்ணில், இக்காலத்தும் திரு ஞானசம்பந்தர், நாவுக்கரசர் போன்றோரது எண் ணிறந்த பாடல்கள் இருந்த போதிலும் ஆராய்வு முறையில் பழைய வரிப் பாடல்களுள் ஏதேனும் ஒன்றை இலக்கியமாகக் கொள்வதே சாலப் பொருத்தமுடையதாகும்.

உறுதியாக இது பற்றிய கருத்தினைக் கொண்டே, சிலப்பதிகாரம் கானல் வரியில் அரும் பதவுரை ஆசிரியரால் எடுத்துக் காட்டாகக் கூறப் பெறும் தெய்வஞ் சுட்டிய வரிப்பாடல் ஒன்றினை, இக்கால இசைவாணர்கள் அறியும் படி இசைப்

படுத்தி இப்பண்ணுக்கு இலக்கியமாகவும் காட்டப்பெறுகிறது. இனி இசைப்படுத்தப்பட்ட பாடல்களுக்குப் பண்ணும் தாளமும் நாம் அமைத்துக் கொண்டவை.

இசையமைத்த முறை ஒரோவழி அடிப் படைப் போக்காகவே அமைக்கப்பட்டுள்ளது.

பாடல்களைப் பயில்வோர் யாவரும், முதலில் பாடல் அமைதியினை நன்கறிந்து கொண்டும், பின்னர் இசைப் போக்கு முறையை செவ்வையாக உணர்ந்து கொண்டும், பண்ணின் நிறம் (இராக பாவம்) குன்றாது, பழைய பண் பாட்டினை ஒத்து நன்கறிந்து உணர்ந்து பாடிப்பாடிப் பயின்றும் பயிற்றுவிப்பதும் நலம் பயக்கும்.

சிலப்பதிகாரம் கானல் வரியுரையில் அரும் பதவுரை ஆசிரியர் கூறும் வரிப் பாடல்களின் இலக்கணம்:

''இனி வரிப்பாடலாவது;

பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறுதும் வரும்.

அது தான் தெய்வஞ் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்''.

அரும்பதவுரையாசிரியர் எடுத்துக்காட்டிய

தெய்வஞ்சுட்டிய வரிப்பாடல்

பண்—ஆசான்திறம் (காந்தாரம்)
(இராகம்—மோகனம்)
எடுத்தல்—சரிகபதச்
படுத்தல்—ச்தபகரிச

தாளம்—ஈரொத்துவாரம்
உறுப்பு—◡ ○
எண்கள்—௬

அழலணங்கு தாமரை யருளாழி யுடையகோ னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்றும் போலும்
நிழலணங்கு முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி நிழற்று மாயில்
தொழலணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்கரியும் சொல்லாவன்றே.

பாடலின் இசைக் குறியீடுகள்

சநிதப	=	மெலிவுநிலை
சரிகமபதநி	=	சமநிலை
சரிகமப	=	வலிவுநிலை
ரீ . கா . தா . நீ	=	அசைவிசை
சரிகமபதநி	=	நடுக்காலக்குறி

தாளக் குறியீடுகள்

,	=	ஓரெண்
;	=	ஈரெண்
$\|_{2}$	=	தட்டி இரண்டு விரல் எண்ணுதல்
O	=	தட்டி வீசுதல்
◡	=	தட்டுதல்

◡	○	◡	○
கா பா	க ரீ , ; சா	தா ;	சா ; சாசா
அ ழ	ல ண ங் , ; கு	தா ;	. ; மரை
கா த ப	க ரீ க ரி க ரி ச்	தா சா	சா ரீ சாசா
அ ழ .	ல . ணங் . . . கு	தா .	. . மரை
கா த ப	த ப க ரி க ரி சா	த ச ரி க	ரி க ரி ரி க ரி சா
அ ழ .	ல . ணங் . . . கு	தா. . .	. . . . ம . ரை
பா ரீ	கா ; ரீ ;	த ச தா	சா ; சா ரீ ச ரி கா
அ ரு	ளா ; ழி ;	யு . டை	ய ; கோ . . . ன்
தா கா	க ரி ச ரி க ப த ச்	க ரி க ச	ரி த ச ப த ப க ரி
அ டி	க் கீ . . . . . ழ்ச்	சே. . .	. . . ர்ந்து. . . .

அழலணங்கு =

தா கா | ப த தா தா தா || ப த ச்ா | த ச் த , ச்ா ச்ா ||
நி ழ | ல . ணங் , . கு || மு . ரு | கு . யி . . ர்த்து ||

ரீ தா | த ச தா க ப தா || பா த ச | தா ; பா ; ||
நி ரந் | த . லர்ந் . . து || தோ . . | டே ; ந்தி ; ||

ரீ தா | த ச தா க ப தா || பா த ச | ப த ச த சா ; ||
நி ரந் | த . லர்ந் . . து || தோ . . | டே . . ந்தி ; ||

தா கா | ப க த ப தா தா || ப த ச் த | ப த ச் த ச்ா ச்ா ||
நி ழ | ல . ணங் . கு || மு . ரு . | கு . யி . . ர்த்து ||

ரீ தா | த ச த த ப க பா || ச ரீ த | சா ; க ப தா ||
நி ரந் | த . லர்ந் . . . து || தோ . . | டே ; . . ந்தி ||

க ரி க ரி | சா ரி ச த ப தா || ப ப த த | ச ச ரி ரி கா ; ||
நி . ரந் . | த லர்ந் . . து || தோ. . . | டே. . . ந்தி ; ||

தா கா | ப க த ப தா தா || ப த ச த | த ச ரி ச சா ரீ ||
நி ழ | ல . ணங் . கு || மு . ரு . | கு . யி . . ர்த்து ||

கா ரீ | க ரி ச த ப க ப த || ச ரீ த | சா த சா ப தா ||
நி ரந் | த . லர்ந் . . . து || தோ. . | டே . . . ந்தி ||

கா ரீ | க ரி க ச ரி ச த ச || க ரி ச த | ரி ச த ப ப க ப த ||
நி ரந் | த . . லர்ந். . . து || தோ. . . | டே. . . . . . . ந்தி ||

